பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
26 10 2024 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரஷ்யா – யுக்ரைன் போர் வளர்ந்து வரும் மற்றும் குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக இந்தியாவும், ஜெர்மனியும் தெரிவித்துள்ளன.

2. இந்தியாவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அதிகாரம் பெற்றுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. ஜார்கண்ட் மாநிலத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 43 தொகுதிகளில் போட்டியிட ஆயிரத்து 609 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

4. காஸாவில் நேற்று இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 38 பேர் உயிரிழந்தனர்.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி 3-1 என்ற கோல் கணக்கில் கேரள அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

யுக்ரைனில் நடைபெற்று வரும் போர், துரயமான நிலையை ஏற்படுத்தியுள்ளதாக இந்தியாவும், ஜெர்மனியும் தெரிவித்துள்ளன.

இந்தியா வந்துள்ள ஜெர்மன் பிரதமர் திரு. **Olaf Scholz** உடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று பேச்சுகள் நடத்திய பின்னர், இரு தலைவர்களும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்திற்கு உட்பட்டு விரிவான நீடித்த அமைதிக்கான பேச்சுவார்த்தை அவசியம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா – யுக்ரைன் இடையே நீடித்து வரும் போர் காரணமாக சர்வதேச அளவில் உணவுப்பொருள் மற்றும் எரிசக்தி பொருட்களின் விலை உயர்வு அதிகரித்துள்ளதாகவும், இது வளர்ந்து வரும் மற்றும் குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம் என்ற அச்சுறுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், ஐ.நா. சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச சட்டத்தை இருதரப்பிலும் கடைபிடிப்பது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் மற்றும் வன்முறை எந்தவிதத்தில் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அறிவித்துள்ள பயங்கரவாத குழுக்கள் உட்பட அனைத்து பயங்கரவாதக் குழுக்களுக்கும் எதிராக ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்றும் இரு நாடுகளின் தலைவர்களும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேற்காசியாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்ற பரஸ்பர கருத்துகளை பகிர்ந்துகொண்ட இரு தலைவர்களும் கடந்த ஆண்டு அக்டோபர் ஏழாம் தேதி பாலஸ்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் பயங்கரவாதக் குழு, இஸ்ரேலில் நடத்திய பயங்கரவாத தாக்குதலை கடுமையாகக் கண்டித்தனர்.

காஸாவில் மிகப்பெரிய அளவிலான உயிரிழப்புகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடி குறித்து இந்தியா – ஜெர்மன் பிரதமர்களின் கூட்டறிக்கையில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சமீபத்தில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட உயிரி எரிபொருள் கொள்கை, உயிரி தொழில்நுட்பத்துறையில் மிகப்பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

அரசின் கொள்கை, பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்புக்கான அடித்தளமாக இருக்கப்போகிறது என்றும் அவர் கூறினார்.

புதுதில்லியில் நேற்று உயிரி தொழில்நுட்பத்துறைக்கும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், உயிரி தொழில்நுட்பக் கொள்கை, தேசிய அளவிலான உயிரி பொருளாதாரத்தை 2030ஆம் ஆண்டுக்குள் 300 பில்லியன் டாலர்களாக உயர்த்தும் என்றும் அவர் கூறினார்.

இஸ்ரோ நிறுவனத்துடன் மத்திய அரசு செய்துகொண்டுள்ள ஒப்பந்தம், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்திற்கு உதவும் என்றும், சுகாதாரம் ஆராய்ச்சி மற்றும் உயிரி தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் புதுமை மற்றும் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் என்றும் அமைச்சர் திரு. ஜிதேந்திரசிங் கூறினார்.

<<<<>>>>

அசாம் மாநிலத்தில் 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற உள்ள இடைத்தேர்தலில் போட்டியிட 38 பேர் மனுதாக்கல் செய்துள்துள்ளர்.

**Dholai Samaguri, Behali, Sidli** மற்றும் **Bongaigaon** ஆகிய 5 சட்டப்பேரவைத் தொகுதிகளில் அடுத்த மாதம் 13ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய கடைசி நாளான நேற்று மட்டும் 24 வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்தனர்.

இந்த மனுக்கள் மீதான பரிசீலனை நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

ஆளும் பிஜேபி 5 தொகுதிகளிலும், அதன் கூட்டணிக் கட்சிகள் 2 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

எதிர்க்கட்சியான காங்கிரஸ், 5 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

ஆம் ஆத்மி 2 தொகுதிகளிலும், போடாலாந்து மக்கள் முன்னணி ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

<<<<>>>>

கர்நாடகாவில் மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற உள்ள இடைத்தேர்தலில் போட்டியிட மொத்தம் 83 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

**Chiggavi** தொகுதியில் 26 பேரும், சந்தூர் தொகுதியில் 7 பேரும், சென்னபட்னா தொகுதியில் 50 பேரும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் போட்டியிட நேற்று வரை ஆயிரத்து 609 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனு தாக்கல் நேற்று மாலையுடன் முடிவடைந்த நிலையில் பார்கந்தா சட்டப்பேவைத் தொகுதியில் அதிகபட்சமாக 70 பேர் மனுதாக்கல் செய்துள்ளனர்.

இம்மாநிலத்தின் 43 தொகுதிகளில் அடுத்த மாதம் 13ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்தத் தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் நாளை மறுநாள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஜார்கண்ட் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது.

இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் 20ஆம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில் தேர்தலில் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் தேர்தல் ஆணையம் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

நேற்று உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 51 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக இதுவரை 6 சம்பவங்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்தியாவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அதிகாரம் பெற்றுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் இந்தியாவின் பொருளாதார விருப்பங்கள் என்ற தலைப்பில் இந்திய தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், இது இந்திய அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் ஒரு பகுதி என்று கூறினார்.

மத்திய அரசு வசூலிக்கும் வரியில் நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது என்றும், இதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகள் தங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை முன்கூட்டியே திட்டமிட முடிவதாகவும் அவர் கூறினார்.

நகராட்சிகள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கியமான கருவியாக செயல்படுவதாகவும், அவை சொந்தமான வளங்களைக் கொண்டு வருவாயை திரட்டி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரானின் ராணுவ தலங்களை குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைகளைக் கொண்டு இன்று அதிகாலை தாக்குதல் நடத்தியது.

இது துல்லிய தாக்குதல் என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த சில நாட்களுக்கு முன்பு 200 ஏவுகணைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், காஸாவில் நேற்று இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 38 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 குழந்தைகளும் அடங்குவர் என்று ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் இஸ்ரேல் படைகள் தீவிரமான தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக தெற்கு காஸாவின் ஒரு மருத்துவமனையில் நேற்று இஸ்ரேல் ராணுவத்தினர் சோதனையிட்டபோது இவர்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனையின் ஊழியர்கள், நோயாளிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் இஸ்ரேல் படைகள் சுற்றிவளைத்து கைது செய்ததாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தெற்கு காஸாவில் உள்ள ஜபாலியா நகரில் இஸ்ரேல் படைகள் தரைவழியாக தாக்குதலைத் தொடங்கிய பின்னர் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது குடியிருப்புகளை இழந்துள்ளனர்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், வேட்பாளர்களை இறுதிப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பல தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது.

நேற்றுவரை ஆயிரத்து 292 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

துணை முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ், நாக்பூர் தென்மேற்கு தொகுதியில் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

சிவசேனா தலைவரும், மாநில அமைச்சருமான திரு. உதய்சமந்த், ரத்னகிரி சட்டப்பேரவைத் தொகுதியிலும், பிஜேபி மூத்த தலைவர் திரு. ஆசிஷ் ஷீலர், பாந்த்ரா மேற்கு தொகுதியிலும், சிவசேனாவின் திரு. பிரதாப் சாம்நாயக், **Ovla Majiwada** தொகுதியிலும் போட்டியிட மனு தாக்கல் செய்துள்ளனர்.

சட்டப்பேரவைத் தலைவர் திரு. ராகுல் நர்வேகர், கொலாபா சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட மனுதாக்கல் செய்துள்ளார்.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் செவ்வாய்க்கிழமை கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இம்மாதம் 30ஆம் தேதி நடைபெற உள்ளது.

மனுக்களைத் திரும்பப் பெற அடுத்த மாதம் 4ஆம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி 3-1 என்ற கோல் கணக்கில் கேரள அணியை வென்றது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் முகமதன் அணி – ஹைதராபாத் அணியையும், மற்றொரு போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி - ஜம்ஷெட்பூர் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்த அணியில் அபிஷேக் ஷர்மா, சஞ்சு சாம்சன், ஜிதேஷ் ஷர்மா உள்ளிட்ட 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பார்டர் கவாஸ்கர் டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித் ஷர்மா தலைமையிலான இந்த அணியில் அபிமன்யு ஈஸ்வரன், பிரசித் கிருஷ்ணா, நிதிஷ்குமார் ரெட்டி, வாஷிங்டன் சுந்தர் உள்ளிட்ட 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

வளரும் அணிகளுக்கான ஆசியகோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா “ஏ” அணியை வென்று ஆப்கானிஸ்தான் “ஏ”அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஓமனில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த ஆஃப்கனிஸ்தான் ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 206 ரன் எடுத்தது.

207 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய ஏ அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 186 ரன் மட்டுமே எடுத்தது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் பட்னா அணி – தமிழக அணியை வென்றது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒருகட்டத்தில் தமிழக அணி 18-7 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தபோதும், சுதாரித்துக்கொண்டு விளையாடிய பட்னா அணி ஆட்டத்தின் முடிவில் 42-40 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் முதல் போட்டியில் மும்பை அணி – பெங்கால் அணியையும், மற்றொரு போட்டியில் தெலுகு அணி – தில்லி அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**